தினமலர் நமது மலர்
வாசகர்களே சொல்லுங்க: உங்கள் பகுதி பிரச்னைகளை 98423 70262 என்ற வாட்ஸ்அப்பில் எண்ணில் தெரிவியுங்கள். அவற்றுக்கு தீர்வுகாண, தினமலர் துணைநிற்கும்.
17.7.2026
தர்மபுரி ◦ கிருஷ்ணகிரி

வலியுறுத்தல்

- தர்மபுரி சுற்றுவட்டார கிராம பகுதிகளுக்கு
- போதிய டவுன் பஸ் வசதி இல்லாமல் அவதி
- மாலை நேரத்தில் கூடுதலாக இயக்கணும்

■ தர்மபுரி, ஜூலை 17–

தர்மபுரி நகரில் மாலை நேரத்தில் டவுன் பஸ்கள் போதிய சேவை இல்லாததால், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள், மாணவர்கள் பொதுமக்கள் தினமும் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

தர்மபுரி நகரின் முக்கிய நிர்வாக மற்றும் வணிக மையங்கள் நான்கு ரோடு, அதியமான் பைபாஸ் சாலை, சேலம் சாலை உள்ளிட்ட பகுதிகளில் அமைந்துள்ளன.

இப்பகுதிகளில் கலெக்டர் அலுவலகம், எஸ்பி அலுவலகம் உள்ளிட்ட அரசு அலுவலகங்கள், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தனியார் மருத்துவமனைகள், கல்லூரிகள், ஜவுளிக்கடைகள், டிபார்ட்மெண்ட் ஸ்டோர்கள் மற்றும் ஏராளமான வணிக நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

இந்த நிறுவனங்களில் பணியாற்றும் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவர்கள், தர்மபுரியை சுற்றியுள்ள கிராமங்கள் மற்றும் டிமாநகர் பகுதிகளில் இருந்து தினமும் காலை, மாலை டவுன் பஸ்களை நம்பியே பயணம் செய்து வருகின்றனர்.

மாலை நேரத்தில் அலுவலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் முடியும் நேரமான மாலை 5.45 முதல் 6.30 மணிவரை டவுன் பஸ்கள் இயக்கம் மிகவும் குறைவாக இருப்பதாக பொதுமக்கள் குமுறல்கொட்டுகின்றனர்.

இதனால் வேலை முடித்து வீடு திரும்பும் மக்கள் நீண்ட நேரம் பஸ் ஸ்டாப்பில் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது. மேலும், சேலத்தில் இருந்து தர்மபுரி நோக்கி வரும் பல அரசு, தனியார் பஸ்கள் நகருக்குள் நுழையாமல் புறவழிச்சாலையில் புதிய பஸ் ஸ்டாண்ட் செல்வதால், அந்த பஸ்களில் வரும் பயணிகள் ஒட்டப்பட்டி பகுதியில் இறங்கி, அங்கிருந்து செல்ல டவுன் பஸ் களுக்காக காத்திருக்க வேண்டிய கட்டாயம் உருவாகியுள்ளது.

குறிப்பாக பெண்கள், முதியவர்கள், மாணவர்கள் மற்றும் மருத்துவ சிகிச்சைக்காக வந்த நோயாளிகள் இந்த சிரமத்தால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

இதுகுறித்து பொதுமக்கள் கூறுகையில், தர்மபுரி நகரின் வளர்ச்சிக்கு ஏற்ப பொதுப் போக்குவரத்து சேவையும் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

சென்னை, கோயம்புத்தூர், மதுரை உள்ளிட்ட மாநகரங்களில் இயக்கப்படுவது போல, தர்மபுரியிலும் மாலை நேரங்களில் கூடுதல் 'கட் சர்வீஸ்' டவுன் பஸ்கள் இயக்கப்பட்டால், பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் சிரமமின்றி குறித்த நேரத்தில் வீடு திரும்ப முடியும்.

இதனால் தனியார் வாகனங்களை நம்பும் நிலையும் குறையும் என்றனர்.

எனவே, மாலை நேரத்தில் பயணிகளின் எண்ணிக்கையை ஆய்வு செய்து, தேவைப்படும் வழித்தடங்களில் கூடுதல் டவுன் பஸ்கள் மற்றும் 'கட் சர்வீஸ்' பஸ்களை இயக்க மாவட்ட நிர்வாகமும், தமிழ்நாடு அரசு போக்குவரத்து அதிகாரிகளும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆர்வம்

- ஆடிப்பட்டம் விதைக்க விவசாயிகள்
- முதல் போகத்துக்கு நிலத்தை உழுது தயார்நிலை

■ கிருஷ்ணகிரி, ஜூலை 17–

காவேரிப்பட்டணம் பகுதியில் ஆடிப்பட்டம் முதல் போகத்துக்கு விவசாயிகள் நிலத்தை உழுது தயார்படுத்தி வைத்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில்பல்வேறு இடங்களில் ஆடிப்பட்டம் விதைப்பதற்கு விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ஆடி மாதம் மங்களகரமான மாதம். ஆடிப்பிறப்பு, ஆடி வெள்ளி, ஆடிப்பெருக்கு, ஆடிப்பூரம், ஆடி அமாவாசை, கருட பஞ்சமி, ஆடி கிருத்திகை என பண்டிகைகளின் அணிவகுப்பு நீளும் மாதம் இது.

தமிழ் மாதத்தின் நான்காம் மாதமான ஆடி, தட்சணாயன காலத்தின் தொடக்க மாதம். கடும் கோடையில் இறுகிகாணப்படும் மண், ஆனி மாத மிதமான மழையால் இளகத் தொடங்கிவிடும். ஈரமான வயல் மண்ணில் நுண்ணுயிரிகளும், மண் புழுக்களும் உருவாகத் தொடங்கும். இதனால் மண் செழிப்பை பெறத் தொடங்கி விடும். புதிதாக முளைத்த சிறு செடிகளை மேய வரும் கால்நடைகளின்கழிவுகளும்மண்ணில் சேர்ந்து உரமாகும்.

இதனால் செழிப்பான மண் உழவுக்குத் தயாராகும். 'ஆடிப்பட்டம் தேடி விதை' என்னும் பழமொழியை கடைபிடித்து ஆடிப்பட்டத்தில் விவசாயிகள் விவசாய பணிகளை மேற்கொள்வது வழக்கம். ஆடியில் விதை விதைத்தால் தையில் அறுவடை செய்யலாம் என்ற சொலவடையும் உள்ளது.

அதற்கேற்ப கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டணம், போச்சம்பள்ளி, மத்தூர் என மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் விவசாயிகள் தங்களது நிலத்தை ஆடிப்பட்டம் விதைக்க தயார் செய்து வருகின்றனர்.

தமிழகத்தில் கிருஷ்ணகிரி மாவட்டம் விவசாய விளை பொருட்கள் உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கிறது. மாவட்டத்தில் ஒரு லட்சம் ஏக்கர் பரப்பளவில் மாங்கனிகள் சாகுபடி செய்யப்படுகிறது. அதற்கு அடுத்தப்படியாக 50 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது.

இவை தவிர மலர்கள், தென்னை, வாழை, காய்கறிகள், ராகி, சோளம், போன்ற உணவு தானியங்களும், விவசாயிகள் சாகுபடி செய்கின்றனர். அதன்படி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஆடிப்பட்டம் முதல் போக சாகுபடிக்கு நிலங்களை விவசாயிகள் உழுது தயார் நிலையில் வைத்துள்ளனர்.

கொங்கரப்பட்டி ஏரிக்கு தண்ணீர் விட கோரிக்கை

■ கம்பைநல்லூர், ஜூலை 17

தர்மபுரி மாவட்டம் கம்பைநல்லூர் அடுத்து கொங்கரப்பட்டி பஞ்சாயத்தை சேர்ந்த ஊர்கவுண்டர்கள் வேலு, சின்னதுரை, விவசாய சங்க பொறுப்பாளர் காவேரி மற்றும் விவசாயிகள், அரூர் எம்எல்ஏ சம்பத்குமாரை நேரில் சந்தித்து ஏரிக்கு தண்ணீர் விடக்கோரி மனு அளித்தனர்.

மனுவில் கிராம மக்கள் கூறியிருப்பதாவது,

கொங்கரப்பட்டி ஏரி தண்ணீரின்றி வறண்டு கிடக்கிறது. இதனால் சுற்றுவட்டார பகுதிகளில் குடிநீருக்கும், விவசாயத்துக்கும் நீரின்றி அவதிப்பட்டு வருகிறோம். கொங்கரப்பட்டி ஏரிக்கு அருகில் தென்பெண்ணை ஆற்றில் வீணாகும் உபரிநீரை மின் மோட்டார் அமைத்து வறண்டு இருக்கும் கொங்கரப்பட்டி அட்டை குட்டை ஏரிக்கு தண்ணீர் விட வேண்டும் என மனுவில் தெரிவித்துள்ளனர்.

கேஆர்பி அணையிலிருந்து முதல் போக சாகுபடிக்கு நீர் திறப்பு

■ கிருஷ்ணகிரி, ஜூலை 17–

கிருஷ்ணகிரி கேஆர்பி அணையிலிருந்து முதல் போக சாகுபடிக்கு கலெக்டர் தினேஷ்குமார், எம்எல்ஏக்கள் முகுந்தன், கோவிந்தராசன் ஆகியோர் தண்ணீர் திறந்து வைத்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம், கேஆர்பி அணையிலிருந்து வலது மற்றும் இடது புறம் பிரதான கால்வாய்களில் 9,012 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் வகையில் 120 நாட்களுக்கு முதல் போக விவசாய பாசனத்துக்காக நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது. கிருஷ்ணகிரி கலெக்டர் தினேஷ்குமார், எம்எல்ஏ முகுந்தன், பர்கூர் எம்எல்ஏ கோவிந்தராசன் ஆகியோர் தண்ணீரை திறந்து வைத்தனர்.

இது குறித்து கலெக்டர் கூறியதாவது:

கிருஷ்ணகிரி மாவட்டம், கேஆர்பி அணையின் வலது மற்றும் இடதுபுற பிரதான கால்வாய்களில் முதல் போக பாசனத்துக்காக விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று 9,012 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் வகையில் ஜூலை 16ம் தேதி முதல் நவ.12 வரை 120 நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்படும்.

கேஆர்பி அணையில், இப்போது உள்ள நீர் அளவினை கொண்டும், நீர் வரத்தினை எதிர்நோக்கியும் அணையிலிருந்து வலதுபுற கால்வாய் மூலம் வினாடிக்கு 75 கன அடி வீதமும், இடதுபுற கால்வாய் மூலம் வினாடிக்கு 76 கன அடி வீதம் என மொத்தம் 151 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

இதன் மூலம் கிருஷ்ணகிரி தாலுகாவில் உள்ள, பெரியமுத்தூர், சுண்டேகுப்பம், திம்மாபுரம், சவுட்டஅள்ளி, தளிஅள்ளி, கால்வேஅள்ளி, குண்டலப்பட்டி, மிட்டஅள்ளி, எர்ர அள்ளி, பெண்ணேஸ்வரமடம், காவேரிப்பட்டணம், பாலேகுளி, மாரிசெட்டிஅள்ளி, நாகோஜனஅள்ளி, ஜனப்பரஅள்ளி (ஜெகதாப்) மற்றும் பையூர் ஆகிய 16 பஞ்.களில் உள்ள 9,012 ஏக்கர் நஞ்சை நிலங்கள் பாசன வசதி பெறும்.

நேற்றைய நிலவரப்படி அணையின் கொள்ளளவு 1431.41 கன அடி (49.90 அடி.), அணையின் நீர்வரத்து 243 கன அடியாகும். ஊற்றுக்கால்வாயில் 12 கன அடியும், ஆற்றுமதகுகளில் 231 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

எனவே, விவசாயிகள் நீரினை சிக்கனமாக பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும். மேலும் நீர் பங்கீட்டு பணிகளில் நீர் வள ஆதாரத்துறையினருக்கு ஒத்துழைப்பு தர வேண்டும். இவ்வாறு கலெக்டர் தினேஷ் குமார் தெரிவித்தார். நிகழ்ச்சியில், நீர்வளத்துறை உதவி செயற்பொறியாளர் சபரிநாதன், இணை இயக்குனர் (வேளாண்மை) (பொ) உமா, உதவி பொறியாளர்கள் வெங்கடேஷ், பொன்னிவளவன், தாசில்தார் ராஜலட்சுமி மற்றும் வேளாண்மை, வருவாய்த்துறை, நீர்வளத்துறை அலுவலர்கள் உட்பட விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

அஞ்செட்டி மலை கிராமத்தை சேர்ந்த 8 மாணவிகள் அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அஞ்செட்டி மலை கிராம மாணவிகள் அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் சேர்ப்பு

■ ஓசூர், ஜூலை 17–

கிருஷ்ணகிரி கலெக்டர் உத்தரவின்படி, தளி பஞ்.யூனியன், அஞ்செட்டி யூனியனுக்குட்பட்ட தக்கட்டி, மாவனட்டி, உரிகம், அஞ்செட்டி, தலகுண்டா, கரடிக்கல், நாட்றம்பாளையம், சீங்கோட்டை தொட்டமஞ்சி. கேரட்டி ஆகிய மலைகிராமங்களில் மேல்நிலை இரண்டாம் ஆண்டு முடித்த மாணவர்கள் அனைவரும் உயர் கல்வி பயில நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன்படி மேற்படி கிராமங்களில் கல்லூரியில் சேராத மாணவர்களின் வீடுகளுக்கு டிஇஓ மதன்குமார் தலைமையிலான குழு நேரில் சென்று களஆய்வு செய்து மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு உயர்கல்வியின் அவசியம் குறித்து உரிய அறிவுரைகள் வழங்கினர்.

இந்த களஆய்வின் அடிப்படையில் 2025-26ம் கல்வி ஆண்டில் அஞ்செட்டி அரசு மேல்நிலை பள்ளியில் 12ம் வகுப்பு பயின்ற தொட்டமஞ்சு மலைப்பகுதியை சேர்ந்த லிங்கம்மாள், நாகவேணி, பூஜா, அக்குமாதேவி ஸ்ரீபிரியா, மகேஷ், லட்சுமி, எர்றம்மாள் ஆகிய 8 மாணவிகள் கெலமங்கலம் அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் நேரடியாக விருப்பப்பட்ட பாடப்பிரிவுகளில் சேர்க்கப்பட்டனர். இதில் உதவி திட்ட அலுவலர் மகேந்திரன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கணேசன், தளி ஒருங்கிணைப்பாளர் சுந்தரலிங்கம், தொட்டமஞ்சு ஆசிரியர் பயிற்றுநர்கள் அருள், கோவிந்தராஜி, பட்டதாரி ஆசிரியர் சிவக்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

மூக்கனஹள்ளி அரசு உயர்நிலைப்பள்ளியில் நடந்த மாணவர் பேரவை தேர்தலில் ஓட்டளித்த மாணவ, மாணவியர்கள்.

அரசு உயர்நிலைப்பள்ளியில் மாணவர் பேரவை தேர்தல்

■ தர்மபுரி, ஜூலை 17–

தர்மபுரி அடுத்த மூக்கனஹள்ளி அரசு உயர்நிலைப்பள்ளியில் பள்ளியின் பாடம் சார்ந்த மற்றும் பாடம் சாராத இணை செயல்பாட்டு மன்றங்களின்மாணவர் தலைவர், துணைத்தலைவர்உள்ளிட்ட மாணவ உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும் மகிழ் முற்றம் மாணவர் பேரவை, தேர்தல் பள்ளி தலைமையாசிரியர் சின்னசித்தன் தலைமையில் நடந்தது. இதில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து குழுக்களாக பிரிக்கப்பட்டு முறையே தலைவர், துணைத்தலைவர் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள், அவர்கள் பெற்ற வாக்குகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மகிழ்முற்றம் மாணவ பேரவையின் தலைவி இனியாஸ்ரீ நன்றி கூறினார்.

தர்மபுரியில், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க வட்ட பேரவை கூட்டம் நடந்தது.

ரூ.16 லட்சத்தில் அங்கன்வாடி கட்டடம் முகளூரில் எம்எல்ஏ திறந்து வைத்தார்

■ ஓசூர், ஜூலை 17

ஓசூர் அருகே முகளூர் கிராமத்தில் ரூ 16.55 லட்சத்தில் கட்டப்பட்ட அங்கன்வாடி மைய கட்டத்தை எம்எல்ஏ சீனிவாசன் திறந்து வைத்தார்.

கெலமங்கலம் யூனியன் வேப்பனஹள்ளி சட்டசபை தொகுதிக்குட்பட்ட மேடேஅக்ரஹாரம் பஞ்.முகளூர் கிராமத்தில் 2024 25ம் ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில் ரூ.16.55 லட்சம் மதிப்பில் புதிய அங்கன்வாடி மைய கட்டடம் கட்டப்பட்டது.

இதன் திறப்பு விழா நேற்று நடந்தது.

சிறப்பு விருந்தினராக வேப்பனஹள்ளி எம்எல்ஏ சீனிவாசன் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி புதிய அங்கன்வாடி மைய கட்டடத்தை திறந்து வைத்து, குழந்தைகளுக்கு இனிப்புகள் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் பிடிஓ குமரேசன், துணை பிடிஓ சுகன்யா, திமுக ஒன்றிய செயலாளர் சின்னராஜ், பஞ். செயலாளர் முத்து, மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

அரசு ஊழியர் சங்க கூட்டம்

■ தர்மபுரி, ஜூலை 17

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 17வது வட்ட பேரவை கூட்டம், தர்மபுரியில் நடந்தது. வட்ட துணைத்தலைவர் தங்கதுரை தலைமை வகித்தார்.

மாவட்ட தணைத்தலைவர் ஜெயவேல் துவக்கி வைத்து பேசினார். வட்ட செயலாளர் மணிராத்தினம் அறிக்கை வாசித்தார். மாவட்ட செயலாளர் தெய்வானை, மாவ ட்ட துணைத் தலைவர் சங்கர், முருகன், தேவகி, ஜாக்டோ ஜியோ நிதி காப்பாளர் புகழேந்தி, பிரபு ஆகியோர் வாழ்த்தி பேசினர். யாரப்பாஷா தீர்மானத்தை முன்மொழிந்தார். மாவட்ட தலைவர் சுருளிநாதன் நன்றி கூறினார். கூட்டத்தில், பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வேண்டும். காலமுறை ஊதியம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

பறிமுதல் செய்யப்பட்ட வாகனத்தின் ஏலம்
தேதி: 27.08.2026
நேரம்: 11.00Am to 12.00 Noon

SSI ஓசூர் கிளை
பேங்க் ஆஃப் பரோடா
Bank of Baroda
சர்வே நெ. 77/19A, ஸ்ரீ வாசவி என்கிளவ், பெங்களூரு புறவழிச்சாலை, பேருந்து நிலையம் எதிரில், ஓசூர்-635109.
போன் : 04344 – 240920 & 240944

வாகன மின் ஏல அறிவிப்பு

பொதுமக்களுக்கும், குறிப்பாகக் கடன் வாங்கியவர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) ஆகியோருக்கும் இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், சம்பந்தப்பட்ட தரப்பினரால் கையொப்பமிடப்பட்ட அடமானம்/கடன் ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள அடமானம் வைக்கப்பட்ட மோட்டார் வாகனத்தை வங்கி திரும்பப் பெற்றுள்ளது/கைப்பற்றியுள்ளது. மேலும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கு/கணக்குகளில் நிலுவைத் தொகையை வசூலிப்பதற்காக, **அந்த வாகனம் உள்ளபடியே, இருக்கும் இடத்திலேயே, உள்ளபடியே, என்ன இருக்கிறதோ அப்படியே மற்றும் இருப்பது எதுவாக இருந்தாலும் என்ற அடிப்படையில் விற்கப்படும்.** கடன் வாங்கியவர்(கள்)/உத்தரவாதமளித்தவர்(கள்)/வாகனம்/மொத்த நிலுவைத் தொகை/ மின்-ஏலத் தேதி மற்றும் நேரம், முன்பணம் மற்றும் ஏல உயர்வு தொகை ஆகியவற்றின் விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வ. எண்.	பைக்/ கணக்கு எண்.	பதிவு எண்/வாகனத்தின் வகை	15.07.2026 அன்று நிலுவைத் தொகை	மதிப்பீடு	நிர்ணயிக் கப்பட்ட விலை	EMD தொகை
1.	திரு. சரத்குமார். த/பெ. இன்பநாதன். எரு. 155, வேலு தெரு. குவேம்புநகர், அட்டிப்பள்ளி, அகேகம் தாலுக்கா, பெங்களூரு-562107.	HONDA AMAZE 1.5 VXMT I DTEC KA 51 MQ 7211 Brown ORIGINAL RC COPY NOT AVAILABLE	Rs. 10,23,848.59/- + இதர கட்டணங்கள் உட்பட.	உணரக கூடிய மதிப்பு	ரூ.2,70,000/-	ரூ.27,000/-

மின் ஏல நாள் : 27.08.2026 & நேரம் : காலை 11.00 முதல் நண்பகல் 12.00 மணி வரை
குறைந்த பட்ச ஏல உயர்வு தொகை ரூ.5,000/- (ரூ. ஐந்தாயிரம் மட்டும்)
வாகனத்தை பார்வையிடும் நாள் & நேரம்: 27.07.2026 காலை 10.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை
BAANKNET Property ID : BARBSARATHKUMAR

நிபந்தனைகள்: 1. விற்பனையின் விரிவுமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு பேங்க் ஆஃப் பரோடா பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குநரின் இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ள இணைப்பை பார்க்கவும். அதாவது www.bankofbaroda.bank.in/webcast.htm, 2. ஏலம் மற்றும் விற்பனையானது https://baanknet.com என்ற அதிகாரபூர்வ இணையதளம் வழியாக மின் ஏல முறையில் மட்டுமே நடத்தப்படும். 3. வெற்றி பெற்ற ஏலதாரர் 18% GST தொகையை செலுத்த வேண்டும். 4. ஏலத்தில் பங்கேற்க விரும்புவோர் ஏலதாரர்கள், தங்கள் ஏலங்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்பும், மின் ஏல விற்பனை நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கு முன்பும், மின்-ஏல விற்பனைக்கான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://baanknet.com என்ற இணையதளத்தை பார்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும் மேலே குறிப்பிடுள்ள சம்மந்தப்பட்ட வாகனத்திற்காக, கிளை மேளாளர் திரு. மதன்குமார் நாகராஜன் செல்: 8220678655 அவர்களை தொடர்பு கொள்ளவும்.

தேதி : 15.07.2026
இடம் : SSI ஓசூர்

அதிகாரப்பூர்வ அலுவலர், முதன்மை மேலாளர்/ பேங்க் ஆஃப் பரோடா